# ஷாதிலீ மாலை

1. உலகமெல்லாம் படைத்தளிக்கும் உயர்வான அல்லாஹ்வின்
அலகில்லா அருள்பெருகும் அபுல்ஹஸனுஷ் ஷாதிலியே!

2. எத்திரையும் நீக்கியருள் ஏகனையே கண்டுவந்த
முத்திரையாம் நபிநயினார் முழுதுவக்கும் ஷாதிலியே!

3. சீரழகு பெற்றிந்த சிறப்புடைய கிமராவின்
பேரழகைப் பெருக்க வந்த பேறுடைய ஷாதிலியே!

4. தொல்ஹிஜ்ரீ ஐநூற்றுத் தொண்ணூற்று மூன்றதனில்
நல்வருகை தந்திட்ட நாயகரே ஷாதிலியே!

5. ஞானத்து வாயிலெனும் நற்பட்டம் பெற்ற ஹைதர்
வானத்து வழியதனில் வந்துதித்த ஷாதிலியே!

6. மெய்ஞ்ஞான மேதைகளின் மேன்மையுறு மரபதனில்
அஞ்ஞானம் போக்கவந்த அரும்புகழின் ஷாதிலியே!

7. தூண்டுகிற அறிஞருறை தூனிசுமா நகரடைந்து
வேண்டுகின்ற கலைகளெலாம் விரும்பியுணர் ஷாதிலியே!

8. நல்லறிவுக் களஞ்சியமாம் நஜ்முத்தீன் இஸ்ஃபஹானி
சொல்லறிவுத் திறமனைத்தும் சுவைத்துணர்ந்த ஷாதிலியே!

9. அறிவுலகப் பேரொளிகள் ஆக்கியருள் நூல்கள்தரும்
செறிவுடைய ஞானமெலாம் சேகரித்த ஷாதிலியே!

10. முற்பதியாம் ஃபாஸ்நகரில் முஹம்மதிப்னுல் அலியென்பார்
சொற்பொழிவில் சொக்கிவிட்ட சோதிமிகு ஷாதிலியே!

11. ஹஜ்ஜதனை இளமையிலே ஆர்வமுடன் நிறைவேற்றி
மெச்சுகின்ற நிலையடைந்த மேதைவலி ஷாதிலியே!

12. பாற்சுவையும் பழச்சுவையும் பணிந்துவிடும் மெய்ஞ்ஞான

மேற்சுவையை நாடிநின்ற மேன்மையிமாம் ஷாதிலியே!

13. அருஞான வழிமுறையில் அப்துஸலாம் இப்னுமஷீஷ்

குருஞான உபதேசம் கொண்டுவந்த ஷாதிலியே!

14. பகலெல்லாம் நோன்பிருந்தும் இரவெல்லாம் தொழுதிரந்தும்

நிகரில்லா மறையோதி நெஞ்சுவந்த ஷாதிலியே!

15. இறைநேயச் செல்வருறும் இல்ஹாமாம் உதிப்படைந்து

நிறைவான ஞானமுறும் நீடுபுகழ் ஷாதிலியே!

16. அறவுரையால் மாந்தருக்கே அரியபணி செய்கவென

இறையுணர்த்தும் ஆணையினை ஏற்றெடுத்த ஷாதிலியே!

17. ஷாதிலாவாம் பதியதனைச் சார்ந்தாற்றும் அறவுரையால்

ஷாதிலியாம் பட்டமதைச் சார்த்தினரே ஷாதிலியே!

18. இறைபணியில் தனித்தன்மை எய்திவிட்ட இயல்பதனை

முறையுடனே குறிக்கின்ற முதுபெயரின் ஷாதிலியே!

19. நல்லோர்கள் நிறைந்திருந்த நலமான தூனிஸ்நகர்

வல்லோனின் வலியாக வரவேற்ற ஷாதிலியே!

20. பொய்விளக்கம் கூறிவந்த புல்லியர்க்குத் திருமறையின்

மெய்விளக்கைக் காட்டவந்த மேன்மையுறும் ஷாதிலியே!

21. நன்னெறிக்குப் புறம்பான நலிவுறுத்தும் செயலனைத்தும்

வன்மையுடன் கண்டித்து வழிகாட்டும் ஷாதிலியே!

22. நல்லடியார் எனச்சொல்லி நாடுசுற்றும் போலிகளைச்

சொல்லடியால் திருத்திவிட்ட சொல்லரசே ஷாதிலியே!

23. நெஞ்சகத்து நேர்மையற்ற நீதிபதி இப்னுபர்ராஹ்

வஞ்சகத்தை வீழ்த்திவென்ற வாய்மையுறும் ஷாதிலியே!

24. சிறைச்சுவர்க்குக் கைவிரலால் சைக்கினையைக் காட்டியதும்

அறைச்சுவரே வெடித்துவிட்ட அற்புதம் செய் ஷாதிலியே!

25. அறக்கூடத் தன்பருடன் அந்திமக்ரிப் தொழுவதற்குச்

சிறைக்கூடம் விட்டுவந்த சீரியரே ஷாதிலியே!

26. அறிவில்லா எகிப்தரசன் ஐயூபு மாலிக்ஷா

நெறியில்லாப் பிழையுணர நெறிகாட்டும் ஷாதிலியே!

27. அன்புடனே விருந்தளித்த அபூயூசுப் ஐயூபியைப்

பண்புடனே வாழ்த்திமிகப் பயன்விளைத்த ஷாதிலியே!

28. நற்புதல்வர் மூவரினால் நற்செல்வி ஒருவரினால்

பொற்புடைய இல்லறத்தால் புகழ்விளைத்த ஷாதிலியே!

29. தண்மைநபி நாயகத்தின் தடையில்லாத் தரிசனையால்

திண்மைமிகப் பெற்றுவிட்ட தீன்சுனையே ஷாதிலியே!

30. முத்துநபி ஆணையினை முறையுடனே ஏற்றுமிஸ்ரின்

தத்துவத்து வித்தகர்கள் தமைத்திருத்தும் ஷாதிலியே!

31. மாறுசெய்யா மாந்தருறும் மாண்புடைய ஹுமைதராவில்

ஊறுகின்ற கிணற்றருகே உறைந்துவிட்ட ஷாதிலியே!

32. இலாஹுயெனும் திக்ருடனே இரவெல்லாம் விழித்திருந்து

இலாஹீயை அடைந்துவிட்ட இறைநேயர் ஷாதிலியே!

33. கறையில்லாத் தொழுகையிலே கடைசிசுஜூத் செய்திடவும்

இறையவனைச் சேர்ந்துவிட்ட ஏந்தலிமாம் ஷாதிலியே!

34. அரிய ஹிஜ்ரீ அறுநூற்றைம் பத்தாறு ஷவ்வாலில்

உரியபிறை பத்தினிலே உயிர்துறந்த ஷாதிலியே!

35. உறுமுத்து நாயகர்போல் உயர்சித்தீக் உமறினைப்போல்

அறுபத்து மூன்றாண்டும் அவனியுறை ஷாதிலியே!

36. அடுத்துவரும் இறைநேயர் அபுல்அப்பா சுல்முர்சீ

தொடுத்துவரும் கலீபாவாய்த் தொடர்காணும் ஷாதிலியே!

37. நெஞ்சமுற இறையவனின் நேயமுறு வழியினுக்குப்

பஞ்சசீலக் கொள்கையினைப் பரிந்தளித்த ஷாதிலியே!

38. அகத்தினிலும் புறத்தினிலும் அல்லாஹ்வை அஞ்சுதற்காய்

இகத்தினரை வேண்டிமக்கள் இடர்நீக்கும் ஷாதிலியே!

39. சொல்லினிலும் செயலினிலும் ஷரீஅத்தைப் பேணிடவே

சொல்லினிக்கக் கூறுகின்ற சோதிமிகு ஷாதிலியே!

40. வறுமையிலும் வளத்தினிலும் வல்லோனாம் இறையவனைப்

பொறுமையுடன் முன்னோக்கப் புகலுகின்ற ஷாதிலியே!

41. அருட்கொடைகள் மிகுந்திடினும் அவைமிகவும் குறைந்திடினும்

அருட்பெரியோ னுக்கிணங்க அருளியசீர் ஷாதிலியே!

42. நிறைவான இன்பத்தில் நீள்துயரில் சிக்குறினும்

இறையின்பால் திரும்பிடவே இயம்புகின்ற ஷாதிலியே!

43. ஏற்றமுள்ள லாயிலாஹ இல்லல்லாஹ் வுடனல்லாஹ்

தேற்றமுறு திக்ரிரண்டும் தேர்ந்தெடுத்த ஷாதிலியே!

44. நன்மைமிகும் ஹிஸ்புல்பஹ்ர் நாள்தோறும் ஓதிவரின்

இன்மையறும் என்றுரைத்த இனியவிமாம் ஷாதிலியே!

45. காற்றிலுறு தூசியினும் கடையனெனத் தனைக்காண்போன்

ஆற்றலுறு சூ∴பியென்றே அறைந்த ஷெய்கு ஷாதிலியே!

46. ஞானத்தில் இறையவனை ஞானமுற உணர்ந்தவர்க்குக்

காலமெல்லாம் லைலத்துல் கத்ரென்றீர் ஷாதிலியே!

47. மறைசூறா இக்லாசை மறவாமல் ஓதிவரின்

இறையுணர்வு மிகுமென்றே எடுத்துரைத்தீர் ஷாதிலியே!

48. ∴பலக்கென் னும் சூறாவைப் பசிநீக்கி உணவுபெறும்

இலக்குடனே ஓதிவர இயம்புகின்ற ஷாதிலியே!

49. பீதிபிற தீங்ககற்றப் பின்சூறா நாஸினையே

ஓதிவரச் சொன்னவெங்கள் உத்தமரே ஷாதிலியே!

50. சொல்லுண்மை புலப்படவே சூரத்துல் கத்ரோதச்

சொல்லுகின்ற பெரும்ஷெய்கே சோனைநிகர் ஷாதிலியே!

51. இறைபொருத்த முடனன்பு இணைந்தமையா மதிப்பெல்லாம்

நிறையாமல் அழியுமென நிகழ்த்துமொலி ஷாதிலியே!

52. நாட்டமுடன் தேட்டமெலாம் நல்விதமே நிறைவேற

ஈட்டுமிறை தவக்குலென இயம்புமிமாம் ஷாதிலியே!

53. அகம்புறமும் ஒளிமிகவே ஆர்வமுளோர் இராப்போது

திகழிறையை வணங்குவதற்குத் தெருட்டுகின்ற ஷாதிலியே!

54. இருமையிலும் வெற்றிபெற இன்குணங்கள் பணிவமைதி

பெரும்பொறுமை வேண்டுமென்றே பேசுகின்ற ஷாதிலியே!

55. இரகசியக் கொடையுடனே இனந்தழுவி வாழ்வோர்கள்

இறைகோபம் தவிர்ப்பரென இயம்புமிமாம் ஷாதிலியே!

56. என்னரிய சீடர்களே என்னுடைய நூல்களெனும்

பொன்னரிய கருத்துரைத்த புகழுடைய ஷாதிலியே!

57. ஆடவரில் பீடுடைய ஆயிரத்தோ டாயிரமாம்

சீடர்களைப் பெற்றிருந்த சீர்ஷெய்கு ஷாதிலியே!

58. இம்மையிலும் மறுமையிலும் இருஞ்சிறப்பை அளித்திடுமோர்

செம்மையுறு பாட்டையினைச் செப்பனிட்ட ஷாதிலியே!

59. தாரணியில் சிறந்தோங்கும் தரீகத்துஷ் ஷாதிலியின்

சீரணியின் தலைமையினால் சிறந்தோங்கும் ஷாதிலியே!

60. அவையோர்கள் அகமகிழ அருமையுறு மிலக்கியத்தின்

சுவைபொருந்த உரையாற்றும் சுகந்தமலர் ஷாதிலியே!

61. குறையாது மில்லாது குன்றிலிடு தீபமென

மறையாத ஒளிவழங்கும் மாமேதை ஷாதிலியே!

62. ஆராத அறிவடைய ஆர்வமுடன் வருவோரின்

தீராத வேட்கையினைத் தீர்த்துவைக்கும் ஷாதிலியே!

63. காலத்தின் குதுபெனவும் கௌதெனவும் இமாமெனவும்

ஞாலத்தில் பெயர்நாட்டும் நாயகரே ஷாதிலியே!

64. இவ்வுலகின் விழியெனவும் இறைசிர்ரின் நாவெனவும்

செவ்வுரையின் பூஸ்ரியிமாம் சிறப்பிக்கும் ஷாதிலியே!

65. ஒன்றான உயர்பொருளை உள்ளத்தில் ஏற்றி வைத்துக்

குன்றாத சிறப்படைந்த குதுபுலக்பர் ஷாதிலியே!

66. கலிமாவின் பொருளுணர்ந்து காவலனை வணங்கிவந்த

வலிமார்கள் பேரரசே வழித்துணையாம் ஷாதிலியே!

67. பணிவுடனே இன்முகமும் பரிவுரையும் இன்னருளும்

அணிகலனாய்ப் பூண்டிலங்கும் அன்பொழுகும் ஷாதிலியே!

68. பீதியினால் துன்புறுவோர் பிணிநீக்கும் மாமருந்தே

சோதியினால் சோர்வகற்றிச் சுகமளிக்கும் ஷாதிலியே!

69. காதுகளில் தேன்பாய்ச்சி கறைநீக்கும் சிறப்புடைய

ஓதுமறை மொழிபருகி உவப்படையும் ஷாதிலியே!

70. பாருலக மாந்தரிகளின் பசிதாகம் போக்கிடுமோர்

ஊருணிபோல் பயன் விளைக்கும் உயர்ஷெய்கு ஷாதிலியே!

71. கதியளித்துக் காக்கவரும் கடல்ஹிஸ்பு பஹ்ரென்னும்

நிதியளித்து நீணிலத்தில் நிலைத்திருக்கும் ஷாதிலியே!

www.sufimanzil.org